சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்: 24.03.2026

DW1: ராவனேஸ்வரன் த/பெ– துரைச்சாமி

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி–</u>**

18) தாவா B பட்டியல் சொத்திற்கு தெற்கே சர்வே எண்.963/3 ஏ உள்ளது. அதற்கு வடக்கே சர்வே எண்.964/2 ஏ 3 உள்ளது என்றால் சரிதான். அதற்கும் வடக்கே சர்வே எண்.964/2 ஏ 2 உள்ளது என்றால் சரிதான். அது 1 முதல் 8 வாதிகளின் தகப்பனார் முருகானந்த தேவருக்கு பாத்தியப்பட்டது. அதற்கும் வடக்கே சர்வே எண்.964/2 ஏ 1 டி 9 முதல் 11 பிரதிவாதிகளின் தகப்பனார் சிங்கத்துரைக்கு பாத்தியப்பட்டது. ஸ்ரீவில்லிபுத்தூர் ரோட்டில் இருந்து தாவாசொத்திற்கு மகாத்மா காந்தி நகர் வழியாக பொதுபாதை உள்ளது என்றால் சரியல்ல, வாதிகள் அவர்களாக பாதை அமைத்துள்ளனர். தாவா B பட்டியல் சொத்திற்கு செல்வதற்கு வாதிகள் பாலம் அமைத்துள்ளனர் என்றால் பாலம் அமைத்துள்ளனர், மேற்படி பாலம் அமைத்த விபரம் எனக்கு தெரியாது, நான் வெளியூரில் இருந்தேன்.

19) அந்த பாலம் சர்வே எண்.964/2 ஏ 3 ல் தென்வடலாக மேல் பகுதியில் குறைவாகவும், கீழ்பகுதி அதிகமாகவும் பாலம் அமைக்கப்பட்டது. பொதுப்பாதையில் பாலம் அமைக்க வேண்டும் என்றால் பஞ்சாயத்து அலுவலகத்தில் அனுமதி பெற வேண்டும் என்றால் சொத்தின் உரிமையாளரிடம் அனுமதி பெற வேண்டும். சர்வே எண்.964/2 ஏ 3 ல் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்பதால் அவர்கள் அனுமதி பெற்று பாலம் அமைத்தார்கள் என்றால் சரியல்ல. சர்வே எண்.964/2 ஏ 3 கீழ்பகுதி பள்ளமாக உள்ளது, அதில் உள்ள மண்ணை வாதிகள் அள்ளிவிட்டனர்.

20) பாலத்திற்கு கீழ்பக்கம் மற்றும் மேல்பக்கம் பண்ணைக்குட்டை அமைத்து வாதிகள் நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சினார்கள் என்றால் சரியல்ல. சர்வே எண்.964/2 ஏ 3 ன் கீழ்பகுதியில் கிணறு உள்ளது என்றால் பொது கிணறு இருந்தது, தற்போது அது துார்ந்துவிட்டது. சர்வே எண்.964/1 ல் கிணறு உள்ளது. சர்வே எண்.964/2 ஏ 3 உட்பிரிவு செய்வதற்கு முன்னர் நானோ, எனது தகப்பனாரோ, எனது பாட்டனாரோ விவசாயம் செய்தோமா என்றால் நாங்களும், வாதிகளின் முன்னோர்களும் விவசாயம் செய்யவில்லை. வாதிகள் சர்வே எண்.964/2 ஏ 3 கீழ்பகுதியில் பண்ணைக்குட்டை அமைத்து விவசாயம் செய்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும் நான் உயில் ஏற்படுத்திக்கொண்டு பின்னர் 2021 க்கு பின்னர் வாதிகளுக்கு இடையூறு செய்தேன் என்றால் சரியல்ல.

21) வாதிகளுக்கு பூர்வீகமான இடத்தினை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும், எனது பெயரில் தவறாக ஏற்பட்ட பட்டாவை வைத்து இடைஞ்சல் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா B மற்றும் C பட்டியல் சொத்துக்கள் எந்த காலத்திலும் எனது மற்றும் எங்கள் மூதாதையர் அனுபவத்தில் இருந்தது இல்லை என்றால் சரியல்ல. மாவட்ட வருவாய் அலுவலரிடம் சர்வே எண்.964/2 ஏ 3 சொத்து 3 நபர்கள் பெயரில் கூட்டாக கூட்டுபட்டா ஏற்பட்டிருந்ததை தனிப்பட்டா வழங்க வேண்டும் என்று மனு செய்து 26.03.2021 ம் தேதி அவர் பிறப்பித்த உத்தரவின் பேரில் எனக்கு தனிப்பட்டா ஏற்பட்டது என்றால் நியாயமான முறையில் விசாரித்து உத்தரவு வழங்கினார். மேற்படி பட்டா எனது தரப்பிலும், வாதிகளின் தரப்பிலும் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பட்டா மாறுதல் உத்தரவு சட்டப்படி செல்லாது என்றும் அதன் அடிப்படையில் எனது பெயருக்கு வழங்கப்பட்ட தனிப்பட்டா செல்லாது என்றால் சரியல்ல.

22) 18.10.2019 ம் தேதி நானும், எனது மகளும் சேர்ந்து எனது மகனான 3 ம் பிரதிவாதிக்கு B பட்டியல் சொத்தை தானம் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். அதில் 1 ம் இலக்க சொத்தாக சர்வே எண்.964/2 ஏ 3 காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் சொத்து மதிப்பாக ரூ.2,01,285/- காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் காட்டப்பட்ட சொத்து மதிப்பின் படியும், வழிகாட்டு மதிப்பின்படியும் தாவா B பட்டியல் சொத்து மதிப்பிட பட்டு நீதிமன்ற கட்டணம் வாதிகளால் முறையாக செலுத்தப்பட்டது என்றால் சரியல்ல. நான் மோசடியாக பதிவு செய்த தானசெட்டில்மெண்டில் உள்ள 1 ம் இலக்க சொத்தை பொறுத்து மேற்படி ஆவணம் சட்டப்படி செல்லக்கூடியது இல்லை என்றும், அது வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

23) மாவட்ட வருவாய் அலுவலர் எனது பெயரில் பட்டா வழங்க பிறப்பித்த உத்தரவில் இவ்வழக்கின் வாதிகள் தரப்பினர்கள் இல்லை என்றால் கூட்டுப்பட்டாவில் உள்ள நபர்களுக்கு மட்டும் அறிவிப்பு அனுப்பி விசாரணை செய்து உத்தரவிடப்பட்டது. தாவா B பட்டியல் சொத்திற்கு எனது பெயரில் தனிப்பட்டா வழங்க உத்தரவு பிறப்பித்த பின்னர் மேற்படி சொத்து யார் அனுபவத்தில் உள்ளது என்றும், நேரடியாக விசாரணை செய்யவில்லைஎன்றால் சரியல்ல, உரிய முறையில் விசாரித்து உத்தரவு வழங்கினார். தாவா B பட்டியல் சொத்து வாதிகளின் அனுபவத்தில் நெடுங்காலமாக உள்ளது என்றும், மேற்படி சொத்திற்கு எனது பெயரில் பட்டா வழங்கப்பட்டது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. மேற்படி சொத்திற்கு பட்டா வழங்குவதற்கு முன்பு அதற்கான மூல ஆவணங்களை

பரிசீலனை செய்யவில்லை என்றும், அவ்வாறு பரிசீலனை செய்து இருந்தால் எனது பெயரில் பட்டா வழங்க பிறப்பித்து இருக்க மாட்டார் என்றால் சரியல்ல.

24) தாவா வழக்கிற்கு அவசிய தரப்பினர் யார் என்று எனது எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வாதிகள் அவசிய தரப்பினர்கள் அனைவரையும் சேர்த்து தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றும் எனவே தாவா வழக்கு அவசிய தரப்பினரை சேர்க்காத காரணத்தினால் பாதிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா A பட்டியல் சொத்தில் B and C பட்டியல் சொத்து உள்ளடங்கியது என்றால் சரியல்ல. B பட்டியல் சொத்து வாதிகளுக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்றும், எந்த காலத்திலும் எனக்கோ, எனது முன்னோருக்கோ பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.10 சர்வே எண்.964/2, 964/2 ஏ 3 ல் துரைச்சாமி தேவர் பெயர் உள்ளதா என்றால் பட்டா எண்.663 குறிப்பிடப்பட்டுள்ளது, சர்வே எண் குறிப்பிடமாட்டார்கள். பி.வா.சா.ஆ.10 ல் சர்வே எண்.964/2 சொல்லப்பட்டுள்ளதா என்றால் பட்டா எண் குறிப்பிடப்பட்டுள்ளது.

25) பி.வா.சா.ஆ.11 ஆவணம் வழக்கிற்கு பின்னர் ஏற்பட்டது என்றும் அதனால் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.12 ஆவணத்தில் மொழிபெயர்த்து தாக்கல் செய்த விபரத்தில் 1944 ரத்து பத்திரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 தீர்வை கேட்பு அறிவிப்பில் முருகானந்தம் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சொத்தின் வடக்கு எல்லை சொத்தின் சொத்திற்காக முருகானந்தம் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. பட்டா எண்.1164 எனது பெயரில் வழங்கப்பட்ட பின்னர் வழக்கிற்காக பி.வா.சா.ஆ.4 ஆவணம் மோசடியாக

ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல.

26) சர்வே எண்.964/2ல் 3 ஏக்கர் 82 செண்டிற்கும் வடக்கே உள்ள சொத்திற்கான பட்டா பி.வா.சா.ஆ.13 என்றால் சரியல்ல. வாதிகளின் சொத்து வாதிகளின் மூதாதையர் பெற்ற கிரையத்தின் அடிப்படையில் பாத்தியப்பட்டது என்றும், அனுபவத்தின் அடிப்படையில் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும், சட்டத்திற்கு அப்பாற்பட்டு மோசடியாக பெற்ற பட்டாவின் அடிப்படையில் தாவா சொத்திற்கு இடையூறு செய்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் கோரிய பரிகாரம் வாதிகளுக்கு சட்டப்படி கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல. துரைச்சாமி தேவருக்கு பாத்தியம் இல்லாத சொத்தை உயில் ஆவணத்தில் 6ம் இலக்க சொத்தாக காட்டியுள்ளதால் மேற்படி உயில் சாசனம் செல்லாது என்றால் சரியல்ல. அதன் அடிப்படையில் எனது மகனுக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்ட 1ம் இலக்க சொத்தை பொறுத்து மேற்படி ஆவணம் மோசடியானது என்றால் சரியல்ல. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.